# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 10 | வரலாறு | நேரம்: மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ......................................................................

### பகுதி I

➢ **கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

01. கிபி 5ஆம் 6ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதும், பல பகுதிகளை உள்ளடக்கியதுமான இலங்கையின் வரலாற்றை ஆதார பூர்வமாக அறியக் உதவும் நூல்.
1. தீபவம்சம் 2. இராஜாவலிய 3. மகாவம்சம் 4. போதிவம்சம்

02. "வம்சத்தப்பஹாசினி" என்பது எந்த வரலாற்று நூலுக்கு எழுதப்பட்ட உரை நூல்.
1. மகாவம்சத்தின் முதலாம் பகுதி 2. மகாவம்சத்தின் இரண்டாம் பகுதி
3. தீபவம்சம் 4. போதிவம்சம்

03. கோட்டை முதல் கண்டி வரையான காலத்தில் தோற்றம் பெற்ற தூது இலக்கியம்.
1. மயூர சந்தேசய 2. பெரகும்பா சிரித்த 3. சீதாவாக்க சட்டன 4. பூஜாவலிய

04. அனுராதபுர காலத்தில் இருந்தே இலங்கையுடன் வெளிநாட்டவர்கள் தெடர்பினை பேனி வந்துள்ளனர். அதனடிப்படையில் இலங்கை பற்றிய நூல்களை எழுத வெளிநாட்டவர்கள் அதிக ஆர்வம் காட்டியமை.
1. விஜயனின் வருகையுடன் 2. போர்த்துக்கேயரின் வருகையுடன்
3. அரேபயரின் வருகையுடன் 4. பிரித்தானியரின் வருகையுடன்

05. பதினேழாம் நூற்றாண்டின் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த மக்களின் மொழி பண்பாடு பற்றி அறிய உதவும் நூலை எழுதிய வெளிநாட்டவர்.
1. றொபட் நொக்ஸ் 2. பாஹியன் தேரர் 3. பிலிப் பல்டியஸ் 4. ரிபைரோ

06. பதினேழாம் நூற்றாண்டின் கண்டி இராச்சிய சமூக அமைப்பை சித்தரிக்கும் ஓவியங்களும் விபரங்களும் உள்ளடக்கிய நூலை எழுதிய வெளிநாட்டவர்.
1. இபின் பதூதா 2. றொபட் நொக்ஸ் 3. மெகஸ்தனிஸ் 4. பிளினி

07. கீழே தரப்பட்டுள்ள நபர்களில் இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவத்தின் மூலம் தகவலை சேகரித்து அறிக்கையினை தயாரித்தோரை கொண்ட சரியான விடைத்தொகுதி.
A. அரிஸ்ரோட்டில் B. தொலமி C. பாஹியன் தேரர் D. ரிபைரோ
E. பிளினி F. இபின்பதூதா G. மெகஸ்தனிஸ் H. றொபட் நொக்ஸ்
1. A,C,B,H 2. C,D,F,H 3. C,D,F,G 4. A,B,C,D



kalvi.lk

08. கி.பி ஐந்நதாம் நூற்றாண்டில் இலங்கையின் அரச குடும்ப பெண்களின் ஆடையணிகலன்கள், மற்றும் அழுகுக்கலை பற்றி விளங்கிக் கொள்ள உதவும் ஓவியம்.
1. திவங்கா சிலைமனை ஓவியங்கள்
2. தலதா மாளிகை ஓவியம்
3. தம்புள்ள குகை ஓவியம்
4. சீகிரியா சுவர் ஓவியம்

09. மாணவன் என்ற அடிப்படையில் வரலாற்று அறிவை மிக வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டியது.
1. கடந்தகாலம் பற்றி அறிய
2. புராதன தொழில்நுடப அறிவை பெற்றுக் கொள்ள.
3. விட்ட தவறுகளை மீண்டும் செய்யாது இருக்க.
4. நிகழ்காலத்தை விளங்கி எதிர்காலத்தை வளம் பெறச் செய்ய.

10. வரலாற்று மூலாதாரமாகக் கருதப்படும் நாணயங்கள் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்க.
1. இலங்கையின் பொருளாதார நிலையை அறிய முடியும்
2. இலங்கை கொண்டிருந்த வெளிநாட்டு வர்த்தகம் பற்றி அறிய முடியும்
3. பல்வேறு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள் பற்றி அறிய முடியும்
4. இலங்கையின் உலோகப் பயன்பாடு பற்றி அறிய முடியும்

11. இலங்கையின் தேசிய மரபுரீதியான தொல்பொருட்களைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியமாக அமைவது.
1. எதிர்கால சந்ததியினருக்குக் காட்ட
2. தனித்துவத்தினை எடுத்துக் காட்ட
3. சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்துக்காக
4. கடந்தகால ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தை பெற்றுக் கொள்ள

12. இலங்கையில் கல்வெட்டுக்கள் பொறிக்கும் முறைமை தோற்றம் பெற்றமை.
1. ஆரியரின் வருகையுடன்
2. மஹிந்ததேரரின் வருகையுடன்
3. திராவிடரின் வருகையுடன்
4. ஐரோப்பியரின் வருகையுடன்

13. மத்தியகால இலங்கையில் பயன்படுத்தப்பட்ட "கஹபண" நாணயம் செய்யப் பயன்படுத்தப்பட்ட உலோகம்.
1. செம்பு  2. வெள்ளி  3. தங்கம்  4. இரும்பு

14. பண்டைய மக்களின் தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் திறன் எனபவற்றை உயிரோட்டமாக அறிய பெரிதும் உதவும் மூலாதாரம்.
1. இலக்கிய நூல்கள்  2. ஓலைச்சுவடிகள்  3. தொல்பொருட்கள்  4. வம்சக்கதைகள்

15. இலங்கையில் ஹேமோசேப்பிய மனிதன் வாழ்ந்ததாக கருதப்படும் காலம் ஏறத்தாழ இன்றிலிருந்து எத்தனை வருடங்களுக்கு முன்னர்.
1. ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம்
2. என்பதாயிரம்
3. முப்பத்தெட்டாயிரம்
4. இருபத்தெட்டாயிரம்

16. இலங்கையின் இன்றைய வேடுவர்ளிடையே காணப்படும் கலாசார, உயிரியல் ரீதியிலான பல தன்மைகள் எக் காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கு சமமானவை என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
1. முன் வரலாற்றுக் காலம்
2. ஆரம்ப வரலாற்றுக் காலம்
3. கற்காலம்
4. வரலாற்றுக் காலம்

17. இலங்கையின் கற்காலத்துக்குரிய ஆதாரங்கள் பல இடத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன, அவற்றுள் முதலாவதாக கிடைக்கப் பெற்ற இடம்.
1. பாஹியன்கல  2. பத்திராஜவெல  3. இரத்தினபுரி  4. பூந்தல


kalvi.lk

18. இலங்கையின் கற்காலத்துக்குரிய சூழலியல் வலயங்களில் அகழ்வு மேற்கொள்ளப்படாத சூழலியல் வலயமாகக் காணப்படுவது.

1. வறல் வலயம் 2. ஈரவலயம் 3. அரை வறல் வலயம் 4. இடை உலர் வலயம்

19. இலங்கையின் மத்திய கற்காலத்துக்குரிய கேத்திர கணித உருவிலான கல்லாயுதங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட கற்பாறை.

1. கருங்கல் 2. பளிங்குருக்கல் 3. படிகக்கல் 4. சுன்னக்கல்

20. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் உணவுப்பழக்க முறை பற்றிய தகவல்களைப் பெற்று கொள்ள உதவும் கற்குகை.

1. பாஹியன்கல 2. கித்துல்கலபெலினே 3. இராவன் எல்லே 4. குருவிட்ட பட்டதொம்பல

21. வேட்டையாடுதலின் மூலம் வாழ்ந்த கற்கால மனிதன் விவசாயத்தில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்த சுற்றாடல் காரணி.

1. மண்ணின் வளம் அதிகரித்தமை
2. வேட்டையாடுவதில் காணப்பட்ட சிரமம்
3. குளிர் காலநிலை மாற்றமடைந்து வெப்ப காலநிலை ஆரம்பித்தமை
4. வளமான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றமை.

22. முன்வரலாற்றுக்கால மனிதனின் வாழ்க்கை முறை பற்றி ஓரளவிலேனும் அறிய உதவும் அகழ்வு.

1. ஹல்துமுல்ல 2. உடரஞ்சாமடம 3. பெரகல 4. மெகாலிதிக் மயாணம்

23. இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியேற்றங்களின் பரம்பலானது நதிக்கரையோரங்களுக்கு வெளியே காணப்பட்டதாக நவீன தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர். அவ்வாறு தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரணியாக அமைவது.

1. சனத்தொகை குறைவாகக் காணப்பட்டமை.
2. நதிகளில் காணப்படும் நீர் விவசாயத்திற்கு ஏற்றதாகக் காணப்படாமை.
3. ஆறுகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவு காணப்படாமை.
4. நதிக்கரையை அண்டிய பிரதேசங்களிள் வளமான மண் காணப்படாமை.

24. இலங்கையில் உலர்வலயத்தில் சிறிய கிராமக் குளங்களை மையமாகக் கொண்ட குடியிருப்புகள் எக் காலத்தில் பரவின.

1. கற்காலம் 2. வரலாற்றுக் காலம் 3. ஐரோப்பிய காலம் 4. முன்வரலாற்றுக் காலம்

25. அணைக்கட்டை குறிப்பதற்கு “அவரண” என்ற சொற்பிரயோகம் பொறிக்கப்பட்ட கல்வெட்டு காணப்படும் விகாரை.

1. அபயகிரி விகாரை 2. ரிதி விகாரை 3. கனேகந்த விகாரை 4. ரன்கொத் விகாரை

26. கிருந்தி ஓயாவிற்கு குறுக்கே அணைகட்டி திஸ்ஸமஹராம குளத்தினை உருவாக்கிய ஆட்சியாளனாகக் கருதப்படுபவன்.

1. வசப மன்னன் 2. இளநாக மன்னன் 3. மகாசேன மன்னன் 4. தாதுசேன மன்னன்

27. இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சியில் “தொட்டபோஜக” எனும் பெயருடன் தொடர்புபடுவது.

1. கிராம நிர்வாகத்துடன்
2. படகுத்துறயின் நிர்வாகத்துடன்
3. சிறிய குளத்தொகுதியின் நிர்வாகத்துடன்
3. குளக் கிராமத்தின் நிர்வாகத்துடன்



kalvi.lk

28. பருமக எனப்படுபவர் ஒரு பிரதேசத்தின் நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தார் என்பதை உறிதிப்படுத்தும் கல்வெட்டு.

1. சிதுல்பவ்வ கல்வெட்டு 2. கல்பொத்த கல்வெட்டு 3. பனாகடுவ கல்வெட்டு 4. கண்டலாம கல்வெட்டு

29. கீர்த்தி ஸ்ரீ நிஸங்க மல்ல மன்னன் தனது பல்வேறு கல்வெட்டுகளில் பயன்படுத்திய அரச கோட்பாடு தொடர்பான எண்ணக்கரு.

1. போதிசத்துவ எண்ணக்கரு 2. சக்கரவர்த்தி எண்ணக்கரு
3. தேவ எண்ணக்கரு 4. பரவதராஜ எண்ணக்கரு

30. ஒழுங்கமைப்புடன் கூடிய மத்தியமயமான நிர்வாகத்தைக் கொண்ட பூரண வசதிகளையுடைய தலைநகரை அமைத்தவர்.

1. விஜயன் 2. உபதிஸ்ஸன் 3. பண்டுகாபயன் 4. உருவெல

➢ **அருகில் தரப்பட்டுள்ள உருவச் சிலையினை அடிப்படையாகக் 31,32,33 வினாக்களுக்கு விடையளிக்குக.**



31. உருவச் சிலையில் காட்டப்பட்டுள்ள அனுராதபுர ஆட்சியாளனைக் குறிப்பிடுக.

1. பண்டுகாபயன் 2. துட்டகைமுனு 3. தேவநம்பிய தீஸன் 4. பாதிகாபயன்

32. உருவச் சிலை அமைந்துள்ள விஹாரை முற்றம்..

1. ருவான்வெலிசாய 2. ஜேதவனராமய 3. அபயகிரி 4. தூபராம

33. உருவச் சிலையில் காணப்படும் மன்னன் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பினை கொண்டிருந்த நாடு.

1. இந்தியா 2. அரேபியா 3. உரோம் 4. கிரேக்கம்

34. கிராமத்து இல்லத் தலைவர்களிடம் இருந்தே தெரிவு செய்யப்பட்டவர்கள் கமிக எனக் குறிப்பிட்டுள்ள நூல்.

1. இராஜவலிய 3. பூஜாவலிய 3. சமந்தபாஸதிகாவ 4. நிஹாயசங்கிரக

35. உலர்வலயப் பிரதேச மக்கள் குளத்தொகுதி முறைக்கு வளங்கிய சொற்பிரயோகம்.

1. வெவ்பிரபாதனய 2. வாபிகாம 3. எல்லங்காவ 4. குளத்தொகுதி

36. புராதன காலத்தில் கீழத்தேய நாடுகளில் பெரும்பாலோரின் விருப்புக்கேற்ப தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாலர் எப்பெயரால் அழைக்கப்பட்டார்.

1. மபுறுமுகா 2. கிராமிக 3. சக்கரவத்தி 4. கிராமத்தலைவன்

37. புராதனகால இலங்கையில் குபேரக் கடவுள் என தன்னை கருதி ஆட்சி செய்த அனுராதபுர ஆட்சியாளன்.

1. துட்டகைமுனு 2 காசியப்பன் 3. நிஷங்கமல்லன் 4. குட்ட கண்ண அபயன்

38. துட்டகைமுனு மன்னனால் எல்லாலனிடம் இருந்து மீட்கப்பட்ட இந்துசமுத்திர வியாபார நடவடிக்கையில் இலாபம் ஈட்டிய துறைமுகம்.

1. கோகர்ன 2. ஜம்புகோளப்பட்டுன 3 மாந்தை 4. கொடவாய

39. வசப மன்னனின் ஆட்சியின் போது வடபகுதியின் பிரதேச ஆட்சியாளனாக நியமிக்கப்பட்டவன்.

1. இஷிகிரி 2. திஸ்ஸ 3. அம்புலுகல 4. சப்புமல்குமாரய

40. மோதல்கள் காரனமாக அரசுரிமையைப் பெற்ற அனுராதபுர ஆட்சசியாளன்.

1. துட்டகைமுனு 2. காசியப்பன் 3. பணண்டுகாபயன் 4. தேவநம்பிய திஸ்ஸன்

**($40x2^1/_2$=100 புள்ளிகள்)**



kalvi.lk

## பகுதி II

➢ **கவனிக்க:**

- **எல்லா** வினாக்களுக்கும் விடையளிப்பது கட்டாயமானது.

**01. (அ)** கீழே (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் இலங்கைப் படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலகப்படத்திலும் **குறித்துப் பெயரிடுக**.

**I)** பொலநறுவை, மல்வத்து ஓயா, கோகர்ணம், பாஹியன்கல, பதிராஜவெல, மாணிக்க கங்கை, இரணைமடு, மாந்தை. வல்லிபுரம், கம்பளை. **(10 புள்ளிகள்)**

**II)** கிரேக்கம், மத்தியதரைக் கடல், இந்தியா, பிரித்தானியா, கிரேக்கம், அலக்சாந்திரியா

**(6 புள்ளிகள்)**

**(ஆ) (I)** கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

**A.** இலங்கையின் புத்தசாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்டுள்ள நூல்.

**B.** முன்வரலாற்றுக்காலப் பண்பாட்டை அறிய உதவும் பிரதான ஆதாரம்.

**C.** இலங்கையை ஆட்சி செய்த இலம்பகர்ண அரச வம்சத்தின் முதல் அரசன்.

**D.** சோழர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த ஆட்சியாளன். **(4 புள்ளிகள்)**

- அருகில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் விடைத்தாளில் எழுதுக.



**(II)** 1. அருகில் காட்டப்பட்டுள்ள செதுக்கலினைக் குறிப்பிடுக.

2. இச் செதுக்கல் காணப்படும் இராசதானியைக் குறிப்பிடுக.
3. இச் செதுககல் காணப்படும் விகாரையினைக் குறிப்பிடுக.
4. இச் செதுக்கல் குறித்து நிற்பவையைக் குறிப்பிடுக.

**(4 புள்ளிகள்)**



**(III)** 1. அருகில் காட்டப்பட்டுள்ள நபரின் பெயரினைக் குறிப்பிடுக.

2. இவர் வாழ்ந்த பிரதேசத்தினைக் குறிப்பிடுக
3. இவர் இலங்கை பற்றிக் குறிப்பிட்டுள்ள நூலைக் குறிப்பிடுக.
4. இவர் இலங்கைக்கு வழங்கிய பெயரினைக் குறிப்பிடுக.

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் =28 புள்ளிகள்)**

**02.** 1. கல்வெட்டுக்கள் பொறிக்கப் பயன்படுத்திய கருங்கற்கலின் இயல்புக்கமைய கல்வெட்டின் வகைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

2. பின்வரும் A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து **ஒழுங்குமுறைப்படி** எழதுக.



kalvi.lk

**A.** இலங்கை பற்றிக் குறிப்பிட்டுள்ள டிமுன்டோ நூலை எழுதியவர்

**B.** அனுராதபுரத்தின் ஆரம்பகால கல்வெட்டுக்களிள் பயன்படுத்தப்பட்ட எழுத்துகளுக்கு வழங்கப்பட்ட பெயர்.

**C.** பெலநறுவை காலத்தில் பயன்படுத்தப்பட்ட செப்பு நாணயம்.

**D.** வசப மன்னனின் பிரதேச ஆட்சி பற்றி குறிப்புட்டுள்ள சாசனம்

**(மெகஸ்தனிஸ், பனாக்கடுவ, பிராமிய, அரிஸ்ரோட்டில், அக, தம்பமஸ்ஸ, வல்லிபுரம், சமஸ்கிருதம்)** **(4 புள்ளிகள்)**

3. வரலாற்று மூலாதாரங்கலில் கலவெட்டுக்கள் மற்றும் சாசனங்களின் முக்கியத்துவங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளிகள்)**
4. வரலற்றைக் கற்பதன் முக்கியத்துவங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. **(6 புள்ளிகள்)**

**03.** 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குடியிருப்பின் இயல்பினை அறிய உதவும் தென் மாகாண வெட்டவெளிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

2. பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களுக்கு பொருத்தமான விடையை **அடைப்புக்குறிக்குள்** இருந்து தெரிவு செய்து எழுதுக.

**a)** வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வேலையை இலகுபடுத்த பயன்படுத்திய தொழில்நுட்ப கருவி.

**b)** மக்களால் கைவிடப்பட்ட குளங்களை அண்டிய கிராமங்களுக்கு கல்வெட்டுக்களில் வழங்கப்பட்டுள்ள சொற்பிரயோகம்.

**c)** உடரஞ்சாமடம குடியிருப்பு கண்டறியப்பட்ட மாவட்டம்.

**d)** முன்வரலாற்றுக் காலத்துடன் தொடர்புபடும் காலநிலை. **(4 புள்ளிகள்)**

**(பிளைத்தோசின் யுகம், அனுராதபுரம், இரத்தினபுரி, இரும்பு உலோக கருவி, ஹோலசின் யுகம், கல்லாயுதங்கள், ஒலகம், நியம் கம்)**

3. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் சூழலியல் வலையத்துக்கேற்ப வாழ்க்கை முறைமையில் காணப்பட்ட மாறுபாடுகளினை பின்வரும் **காரணிகளின்** அடிப்படையில் விளக்குக.

a. உணவுப் பழக்கம்

b. வாழ்விடம் **(5 புள்ளிகள்)**

4. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலமும் முன்வரலாற்றுக் காலமும் பல்வேறு விடயங்களில் வேறுபடுகின்றன அவ்வாறு வேறுபட்டு காணப்படும் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக..

**(6 புள்ளிகள்)**

**04.** 1. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் ஒரு குளத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த “வாவிகாம” குடியிருப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

2. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் பின்வரும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த குடியிருப்புக்களுக்கு வரலாற்று மூலாதாரங்களில் வழங்கப்பட்டுள்ள **சொற்பிரயோகத்தினைக்** குறிப்பிடுக.

a. விவசாயிகள் வாழ்ந்த கிராமம்.

b. இடையர் வாழ்ந்த கிராமம்.

c. குயவர் வாழ்ந்த கிராமம்.

d. மீனவர் வாழ்ந்த கிராமம். **(4 புள்ளிகள்)**

3. முன்வரலாற்றுக்காலத்தில் காணப்பட்ட வளர்ச்சியடைந்த தொழில்நுட்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளிகள்)**
4. வரலாற்றுயுகக் குடியிருப்புக்களின் பரமபலில் செல்வாக்கு செலுத்திய பௌதிகக் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. **(6 புள்ளிகள்)**



kalvi.lk

05. 1. இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சியில் பின்வரும் பதவிகளுக்கு வரலாற்று மூலாதாரங்களில் வழங்கப்பட்ட **சொற்பிரயோகத்தினைக்** குறிப்பிடுக.

**a.** குடும்பத் தலைவன்

**b.** கிராமத் தலைவன்

**c.** சிறிய குளத்தொகுதின் பரிபாலகர் **(3 புள்ளிகள்)**

2. மத்திய ஆட்சிமுறையில் பின்வரும் பணிகளுடன் தொடர்புடையவர்களுக்கு வழங்கப்பட்ட **பதவிப் பெயர்களை** அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

**a)** உணவுச்சாலை அதிகாரி.

**b)** நகர பரிபாலகர்.

**c)** அரசனின் யானைப் பிரிவுக்கு பொறுப்பானவர்

**d)** அரசனின் படைப்பிரிவுக்கு பொறுப்பானவர். **(4 புள்ளிகள்)**

**(அமெத, சேனாதிபதிகள், கனபெடிக, அச அதெக, ஹறதி அதெக, படகரிக, பதகு, நகரகுத்திக)**

3. நாட்டு மக்கள் அரசனிடமிருந்து எதிர்பாத்த பணிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளிகள்)**

4. துட்டகைமுனு மன்னன் இந்நாட்டின் முக்கியமான ஆட்சியாளர்களுள் ஒருவர் என்பதனை **பின்வரும்** காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

**a.** அரசியல்

**b.** சமயம் **(6 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk


**01. (அ) (I)** **சுட்டெண்:.................................**






kalvi.lk

01. (அ) (II)






kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page